# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

(தேசியத் தரமதிப்பீட்டுக்குழுவின் B+ தகுதி பெற்றது)

# TAMIL UNIVERSITY, THANJAVUR

(ACCREDITED BY NAAC WITH B+ GRADE)

## 2020-21 கல்வியாண்டு

# சேர்க்கை விவரக் கையேடு

ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டப்படிப்பு
(Five-Year Integrated P.G – M.A)
முதுநிலைப் பட்டம் (M.A., M.Sc, M.P.A)
ஆய்வியல் நிறைஞர் பட்டம் (M.Phil.,)
முதுநிலைப் பட்டயம் (P.G.Diploma)
பட்டயம் (Diploma)
சான்றிதழ் (Certificate)

**இணையதளம் : www.tamiluniversity.ac.in**


தொடர்பிற்கு

1. தொலைபேசி : 04362-227089, 226720 (அலுவலக நேரம் மட்டும்)
2. மின்னஞ்சல் : tuadmissionsection@gmail.com


**இளங்கல்வியியல், கல்வியியல் நிறைஞர் மற்றும் முனைவர்ப்பட்டச் சேர்க்கைக்கான அறிவிப்புகள் தனியாக வெளியிடப்பெறும்.**

தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்மொழி, பண்பாடு, வரலாறு, கலை, அறிவியல் ஆகியவற்றை ஆய்வு செய்யும் ஓர் உயராய்வு மையமாக1981ஆம் ஆண்டு செப்தம்பர்த் திங்கள் 15ஆம் நாள் தொடங்கப்பெற்றது. தஞ்சை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் இயற்கை வளம் சூழ்ந்த எழில் மிகு நிலப்பரப்பில் அமைந்துள்ளது. பல்கலைக்கழக நல்கைக் குழுவின் (UGC) அங்கீகாரத்தைப் பெற்று இப்பல்கலைக்கழகம் ஐந்து புலங்களில் இருப்பத்தாறு துறைகளுடன் இயங்கி வருகின்றது.

## வசதிகள்

- தென்னிந்தியாவின் மிகப்பெரிய ஆய்வு நூலகம்
- இணையதள வசதி (WiFi)
- வேலை வாய்ப்பு வழிகாட்டி மையம்
- மாணவர் குறைதீர் மையம்
- இருபாலருக்கான தனித்தனி விடுதி வசதி
- பட்டியல் / பழங்குடி இனத்தவர் / பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான மத்திய, மாநில அரசுகளின் கல்வி உதவித்தொகை
- பின் தங்கும் பட்டியல் / பழங்குடி இன மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி
- ஒருங்கிணைந்த முதுகலைத் தமிழ் (25 மாணவர்கள்) மற்றும் முதுகலைத் தமிழ் (20 மாணவர்கள்) பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு சிறப்பு கல்வி உதவித்தொகை மாதந்தோறும் ரூ.2000/-
- கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு அரசு கல்வி உதவித்தொகை
- தமிழ்மொழியில் படிக்கும் மாணவர்களுக்கு அரசு விதிப்படி வேலைவாய்ப்பு
- **ஒருங்கிணைந்த ஐந்தாண்டு படிப்புகளில் பயிலும் மாணவர்கள் மூன்றாண்டு இறுதியில் விருப்பத்தின் அடிப்படையில் இளங்கலைப் பட்டத்துடன் வெளியேறும் வசதி**
- பட்டப்படிப்புடன் கூடுதலாகப் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் படிக்கும் வசதி
- மத்திய, மாநிலப் பணித்தேர்வுகளை எழுதுவதற்கான பயிற்சி வகுப்புகள்
- பல்கலைக்கழக நல்கைக் குழுவால் வழங்கப்படும் தேசிய தகுதித்தேர்வு / மாநிலத் தகுதித் தேர்விற்கான இலவசப் பயிற்சி (NET/SET/CSIR/ICHR)
- இலவச யோகா பயிற்சி
- மேம்படுத்தப்பட்ட உடற்பயிற்சிக்கூடம், தரம் வாய்ந்த விளையாட்டு மைதானம்
- நாட்டு நலப்பணித் திட்டம்

## முதுகலை மற்றும் ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டப்படிப்புகள்

| வ.எண் | பாடம் | கல்வித்தகுதி | சேர்க்கைக்கான இடங்கள் | பட்டம் வழங்கும் துறை |
|---|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலைத் தமிழ் (Five-Year Integrated M.A. Tamil) | +2 தேர்ச்சி | 25 | இலக்கியத்துறை |
| 2. | ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலை வரலாறு (Five-Year Integrated M.A. History) | +2 தேர்ச்சி | 25 | கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை |
| 3. | முதுகலைத் தமிழ் – M.A. Tamil (இரண்டாண்டுகள்) | இளங்கலைத் தமிழ் அல்லது பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம் | 25 | இலக்கியத்துறை |
| 4. | முதுகலை வரலாறு மற்றும் தொல்லியியல் - M. A. History and Archaeology (இரண்டாண்டுகள்) | இளங்கலை வரலாறு அல்லது பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம் | 20 | கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை |
| 5 | முதுகலை மொழியியல் - M. A. Linguistics(இரண்டாண்டுகள்) | பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம் | 20 | மொழியியல் துறை |
| 6. | முதுகலை மெய்யியல் - M. A. Philosophy(இரண்டாண்டுகள்) | பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம் | 20 | மெய்யியல் துறை |
| 7. | முதுநிலை நிகழ்த்துகலை (நாடகம் மற்றும் அரங்கக்கலை) – Master of Performing Arts (இரண்டாண்டுகள்) | பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம் | 20 | நாடகத்துறை |
| 8. | முது அறிவியல் சுற்றுச்சூழல் அறிவியல் – M.Sc – Environmental Science (இரண்டாண்டுகள்) | அறிவியல் பாடங்களில் ஏதேனும் ஓர் இளமறிவியல் பட்டம் | 20 | சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை |

## ஆய்வியல் நிறைஞர் பட்டம் வழங்கப்படும் துறைகள்

| வ. எண் | துறை | சேர்க்கைக்கான இடங்கள் | கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 1. | சிற்பத்துறை | 4 | முதுகலை வரலாறு / நுண்கலை / தொல்லியல் |
| 2. | இசைத்துறை | 2 | முதுகலை இசை / பரதநாட்டியம் |
| 3. | நாடகத்துறை | 3 | நாடகம் / நிகழ்த்துகலை / நுண்கலை / தமிழ் |
| 4. | ஓலைச்சுவடித்துறை | 3 | முதுகலைத் தமிழ் / வரலாறு |
| 5. | அரிய கையெழுத்துச்சுவடித்துறை | 5 | முதுகலைத் தமிழ் |
| 6. | கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை | 5 | முதுகலை வரலாறு / வரலாறு மற்றும் தொல்லியல் / கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் / பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் |
| 7. | கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை | 2 | முதுகலை வரலாறு / வரலாறு மற்றும் தொல்லியல் / கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் / பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் |
| 8. | அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை | 6 | முதுகலைத் தமிழ் |
| 9. | மொழிபெயர்ப்புத்துறை | 6 | முதுகலை மொழிபெயர்ப்பு / தமிழ் / ஆங்கிலம் / மொழியியல் |
| 10. | அகராதியியல் துறை | 8 | முதுகலைத் தமிழ் / மொழியியல் |
| 11. | சமூக அறிவியல் துறை | 3 | முதுகலை சமூகப்பணி |
| 12. | அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை | 7 | முதுகலைத் தமிழ் |
| 13. | கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை | 9 | கல்வியியல் நிறைஞர் (M.Ed.) |
| 14. | இலக்கியத்துறை | 10 | முதுகலைத் தமிழ் |
| 15. | மொழியியல் துறை | 4 | முதுகலை மொழியியல் / தமிழ் / ஆங்கிலம் |
| 16. | மெய்யியல் துறை | 5 | முதுகலைத் தத்துவம் (மெய்யியல்) / தமிழ் / இந்தியப் பண்பாடு / யோகா |
| 17. | பழங்குடி மக்கள் ஆய்வு மையம் | 1 | முதுகலை மொழியியல் / நாட்டுப்புறவியல் |
| 18. | நாட்டுப்புறவியல் துறை | 5 | முதுகலை நாட்டுப்புறவியல் / தமிழ் / மொழியியல் |
| 19. | இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி | 6 | முதுகலைத் தமிழ் / ஒப்பிலக்கியம் / ஏதேனும் ஒரு இந்திய மொழியில் முதுகலைப் பட்டம் |
| 20. | சித்த மருத்துவத்துறை | 5 | முதுஅறிவியல் / சித்த மருத்துவம் / உயிர் மருத்துவ அறிவியல் / தாவரவியல் / நுண்ணுயிரியல் / உயிர் வேதியியல் / உயிர் தொழில் துட்பவியல் / மருந்தியல் / மருந்தாக்கவியல் தொடர்புடைய பிற அறிவியல் பாடங்களில் ஏதாவதொரு முதுநிலைப் பட்டம் |
| 21. | தொல் அறிவியல் துறை | 3 | தாவரவியல் / கணிதவியல் / ஏதேனும் ஒரு முதுஅறிவியல் பட்டம் |
| 22. | தொழில் மற்றும் நிலஅறிவியல் துறை (நிலத்தியல்) | 6 | முதுஅறிவியல் நிலத்தியல் / புவியியல் / கடல் நிலத்தியல் பேரழிவு மேலாண்மை / பயன்பாட்டு நிலத்தியல் |
| 23. | கணிப்பொறி அறிவியல் துறை | 3 | முதுநிலைக் கணிப்பொறி அறிவியல் (M.Sc. Computer Science)/ முதுநிலைக் கணிப்பொறி பயன்பாட்டியல் (M.C.A.,) |

| | | | |
|---|---|---|---|
| 24. | சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை | 2 | முதுஅறிவியல்-சுற்றுச்சூழல் அறிவியல் / வேளாண்மை அறிவியல் / மண்ணியல் / நில அறிவியல் / உயிர் அறிவியல் / விலங்கியல் / தாவரவியல்/ நுண்ணுயிரியல் / உயிர் வேதியியல் / வேதியியல் / உயிரி தொழில் நுட்பவியல் / மூலிகை அறிவியல் தாவரவியல் / நுண்ணுயிரியல் / உயிர் வேதியியல் / வேதியியல் |
| 25. | நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை | 4 | நூலக அறிவியலில் முதுநிலைப் பட்டம் (M.L.I.S.) |

## முதுநிலைப் பட்டயம் (PG Diploma)- பகுதி நேரம்

| வ. எண் | பாடப்பிரிவு | சேர்க்கைக்கான இடங்கள் | தகுதி | காலம் | துறை |
|---|---|---|---|---|---|
| 1. | மொழிபெயர்ப்பியல் | 10 | ஏதாவது முதுகலை / முதுஅறிவியல் பட்டம் | இரண்டாண்டுகள் | மொழிபெயர்ப்புத் துறை |

## பட்டயம் (Diploma) – பகுதி நேரம்

| வ. எண் | பாடப்பிரிவு | சேர்க்கைக்கான இடங்கள் | தகுதி | காலம் | துறை |
|---|---|---|---|---|---|
| 1. | 1. சைவ சித்தாந்தம்<br>2. யோகா | 10<br>20 | +2 தேர்ச்சி | ஓராண்டு | மெய்யியல் துறை |
| 2. | கணிப்பொறிப் பயன்பாடு | 10 | +2 தேர்ச்சி | ஓராண்டு | கணிப்பொறி அறிவியல் துறை |
| 3. | சிற்பம் | 10 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | மூன்றாண்டுகள் | சிற்பத்துறை |

## சான்றிதழ் (Certificte) – பகுதி நேரம்

| வ. எண் | பாடப்பிரிவு | சேர்க்கைக்கான இடங்கள் | தகுதி | காலம் | துறை |
|---|---|---|---|---|---|
| 1. | 1 இசை<br>2 பரதநாட்டியம் | 10<br>10 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | ஓராண்டு | இசைத்துறை |
| 2. | தெலுங்கு | 20 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | ஓராண்டு | இந்திய மொழிகள் பள்ளி |
| 3. | சிற்பம் | 10 | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | ஓராண்டு | சிற்பத்துறை |

# விதிமுறைகள்

- ❖ அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் பயிற்றுமொழி தமிழாகும்

## ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுகலை (Five Years Integrated P.G.)

- ❖ பள்ளிக்கல்வித்துறையினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2 கல்விப் படிநிலைகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மொழிப் பாடமாகத் தமிழ் படித்திருக்க வேண்டும்.

## முதுகலை / முதுஅறிவியல்

- ❖ உயர்கல்வித் துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+3 கல்விப் படிநிலைகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இளங்கலை/இளமறிவியல் படிப்புகளில் மொழிப் பாடமாகத் தமிழ் படிதிருக்க வேண்டும்.
- ❖ இளநிலைப் படிப்பில் ஐந்தாம் பருவத்தில் தேர்ச்சி பெற்று, ஆறாம் பருவ முடிவுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்கள் விண்ணப்பம் செய்யலாம். ஒட்டு மொத்த தேர்ச்சி மதிப்பெண் பட்டியல் அளித்த பின்னரே சேர்க்கை உறுதி செய்யப்படும்.

## ஆய்வியல் நிறைஞர்

- ❖ முதுநிலையில் 55% (விழுக்காடு) மதிப்பெண்கள் அல்லது அதற்கு இணையான தரம் (grade) பெற்றிருத்தல் வேண்டும். பட்டியல் / பழங்குடி இனத்தவர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (Non-creamy layer) / மாற்றுத் திறனாளிகள் ஆகிய பிரிவினருக்கு பல்கலைக்கழக மானியக்குழு விதிமுறைகளின்படி விலக்கு உண்டு. இப்பிரிவினர் முதுநிலைப் பட்டப்படிப்பில் குறைந்தது 50% (விழுக்காடு) மதிப்பெண் பெற்றிருத்தல் வேண்டும். (சான்றொப்பம் பெற்ற உரிய சாதிச்சான்றிதழ் இணைத்தல் வேண்டும்).
- ❖ முதுநிலைப் பட்டப்படிப்பில் மூன்றாம் பருவத்தில் தேர்ச்சி பெற்று நான்காம் பருவ முடிவுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்கள் விண்ணப்பம் செய்யலாம். ஒட்டு மொத்த மதிப்பெண் பட்டியல் அளித்த பின்னர் சேர்க்கை உறுதி செய்யப்படும்.
- ❖ உயர்கல்வித் துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+3+2 கல்விப் படிநிலைகளில் படித்தவராக இருத்தல் வேண்டும்.
- ❖ சித்தமருத்துவம் போன்ற படிப்புகளில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+5+3 என்ற கல்விப் படிநிலைகளில் படித்தவராக இருத்தல் வேண்டும்.
- ❖ நுழைவுத் தேர்வின் தகுதி அடிப்படையிலும் தமிழக அரசு அறிவித்துள்ள இனவாரிச் சுழற்சி அடிப்படையிலும் சேர்க்கை நடைபெறும். நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், இளநிலை/முதுநிலைப் படிப்புகளில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் (UGC) விதிமுறைகளின்படி துறையிலுள்ள இடங்களைப் பொறுத்து மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.

- ❖ நுழைவுத் தேர்வு நடைபெறும் நாள், நேரம், இடம் ஆகியன தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கப்படும். நுழைவுத் தேர்வு எழுதாதவர்களின் விண்ணப்பங்கள் சேர்க்கைக்குப் பரிசீலிக்கப்படமாட்டாது.

மேற்கண்ட அனைத்துப் படிப்புகளிலும் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட பாடத்தை நடத்துவது குறித்துப் பல்கலைக்கழகம் முடிவெடுக்கும்.

## விண்ணப்பக் கட்டணம்

| பிரிவு | ஒருங்கிணைந்த முதுகலை / முதுகலை / முது அறிவியல் / முதுநிலை நிகழ்த்துகலை | ஆய்வியல் நிறைஞர் | முதுகலைப் பட்டயம் / பட்டயம் / சான்றிதழ் |
|---|---|---|---|
| பொதுப் பிரிவு | 200 | 300 | 200 |
| ஆதிதிராவிடர் / பழங்குடியினர் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | 100 | 150 | 100 |

விண்ணப்பிக்க விரும்புவோர் www.tamiluniversity.ac.in என்னும் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள முகவரியில் தரப்பட்டுள்ள இணைப்பு (Link) வழியாக விண்ணப்பத்தை நிரப்பி இணையவழியாகவே சமர்ப்பிக்கலாம். (அல்லது) விண்ணப்பங்களைத் www.tamiluniversity.ac.in தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து நிறைவு செய்த விண்ணப்பத்தினை பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் என்ற பெயரில் உரிய விண்ணப்பக் கட்டணத்தை வங்கி வரைவோலையுடன் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

அஞ்சல் வழியாகப் பெற விரும்புவோர் பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் என்ற பெயரில் உரிய விண்ணப்பக் கட்டணத்தை வங்கி வரைவோலையாகப் பெற்று ரூ.50/-க்கான அஞ்சல் தலை ஒட்டிய தன்முகவரியிட்ட உறை இணைத்துப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு:** தீநுண்மிப் பரவலைக் கருத்தில்கொண்டு, விண்ணப்பத்தைப் பெறுவதற்கோ நிறைவுசெய்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிபதற்கோ யாரும் நேரில் வரவேண்டியத்தில்லை.

## விண்ணப்பத்தை நிறைவு செய்தல்

### விண்ணப்பத்தை இணையவழி நிறைவு செய்வதற்கான வழிமுறைகள்

- தமிழ்ப் பல்கலைக்கழக சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பதை நிறைவு செய்யும் முன்னர், சேர்க்கைக் கையேட்டில் உள்ள விண்ணப்பத்தை நிரப்புவதற்கான நெறி முறைகளைப் படிக்கவும்.
- விண்ணப்பதை நிறைவு செய்யும் முன்னர் உரிய கட்டணத்தை, தமிழ்ப் பல்கலைக்கழக இணையத்தில் (www.tamiluniversity.ac.in) https://www.onlinesbi.com/sbicollect/icollecthome.htm?corpID=873308 வழியாக செலுத்தி அதற்கான இரசீதை PDF ஆக சேமித்து வைத்துக்கொள்ளவும்.

  (1) மேற்கண்ட இணைப்பை சொடுக்கி **(Click Check Box to proceed for payment)** தேர்வுப் பெட்டியில் சொடுக்கவும் **(✓ I have read and accepted the terms and conditions stated above)**

  (2) பின்னர் proceed ஐ அழுத்தவும்.

  (3)SBIயின் பணம் செலுத்தும் பக்கத்திற்குச் சென்று **Select Payment Category**ல் **CAMPUS EDUCATION APPLICATION FEE** என்ற பிரிவின் கீழ் தாங்கள் படிக்க விரும்பும் பாடத்தை தேர்ந்தெடுத்து (**எ.கா.) ஒருங்கிணைந்த முதுகலைப் பாடப்பிரிவிற்கு PGஐ தேர்ந்தெடுக்கவும்**) பிற தரவுகளை நிரப்பி பணத்தைச் செலுத்தவும்.

  (4) அதற்கான இரசீதை பதிவிறக்கம் செய்து வைத்துக்கொள்ளவும்.
- இணையவழி விண்ணப்பத்தை நிரப்பும் முன்னர் தேவையான அனைத்து சான்றிதழ்களையும் மின்வருடி (Scan) செய்து PDF கோப்புகளாகச் சேமித்து வைத்துக்கொள்ளவும்.
- இணையவழி விண்ணப்பத்தை www.tamiluniversity.ac.in ல் சென்று முழுமையாக நிறைவு செய்யவும்.
- இணையவழி விண்ணப்பத்தில் கேட்கும் இடத்தில் சான்றிதழ்களை PDFஆக பதிவேற்றம் செய்யவும்.
- இணையவழி விண்ணப்பத்தில் கேட்கும் இடங்களில் கட்டணம் செலுத்தியதற்கான மின் நகலை PDFஆக பதிவேற்றம் செய்யவும்.
- விண்ணப்பத்தை நிரப்பிய பின்னர் சரிபார்க்கவும்.
- விண்ணப்பத்தைச் சரிபார்த்த பின்னர், பதிவேற்றம் (Submitஐ Click செய்து) செய்யவும்.
- பதிவேற்றம் செய்த இறுதி விண்ணப்பத்தின் நகலை சேமித்து வைத்துக்கொள்ளவும்.
- சேர்க்கைக்கு வரும் பொழுது

  1. பதிவேற்றம் செய்த விண்ணப்பத்தின் நகல் ஒன்றையும்
  2. தேவையான சான்றிதழ்களின் 2 நகல்களையும்
  3. அசல் சான்றிதழ்களையும் கொண்டு வரவேண்டும்.

மேற்குறித்த படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் விண்ணப்பங்களை தொடர்புக் கைபேசி எண் உட்பட அனைத்து விவரங்களையும் முழுமையாக நிறைவு செய்து இறுதி நாளுக்கு முன்பாக இணையவழியாகவோ அஞ்சல் வழியாகவோ சமர்ப்பிக்க வேண்டும். அஞ்சல் வழி அனுப்புவோர் விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்கள் ஏதேனும் தேவையிருப்பின் அவற்றின் ஒளிப்பட நகலைச் சொந்தக் கையொப்பம் இட்டு இணைத்து அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்தல் கூடாது.

## தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கீழ்க்காணும் நிறுவனங்களில் அளிக்கப்படும்

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் தொடர்பு முகவரி | தொலைபேசி எண்கள் | பாடங்கள் | வழங்கப்பெறும் பட்டம் |
|---|---|---|---|---|
| 1. | உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>தரமணி,சென்னை – 600 113. | 044-22542992,<br>22542781<br>தொலைநகலி<br>22541436 | தமிழ் | 1. ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலைத் தமிழ்<br>2. முதுகலைத் தமிழ்<br>3. ஆய்வியல் நிறைஞர் |
| 2. | புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்<br>புதுச்சேரி – 605 008 | 0413-225587,<br>2255817 | 1. மொழியியல்<br>2. மானிடவியல்<br>3. தமிழ் இலக்கியம்<br>4. நாட்டுப்புறவியல் | 1. ஆய்வியல் நிறைஞர் |

இந்நிறுவனங்களில் சேர்ந்து படிக்க விரும்பும் மாணவர்கள் விண்ணப்பங்களை மேற்கண்ட நிறுவனங்களுக்கு அனுப்ப வேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வரையறுக்கப்பட்டுள்ள கல்வித்தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

# கல்விக்கட்டண விவரம்

| வ.எண் | கட்டண விவரம் | ஒருங்கிணைந்த முதுகலை | | முதுகலைத் தமிழ் | முதுநிலைப் படிப்புகள் | | ஆய்வியல் நிறைஞர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தமிழ் | வரலாறு | | கலை | அறிவியல் | கலை | அறிவியல் |
| 1. | சேர்க்கைக் கட்டணம் | 100 | 100 | --- | 100 | 100 | 300 | 300 |
| 2. | சிறப்புக் கட்டணம் | 500 | 500 | --- | 500 | 500 | 300 | 300 |
| 3. | பயிற்றுக் கட்டணம் | 750 பருவக் கட்டணம் | 750 பருவக் கட்டணம் | --- | 1000 பருவக் கட்டணம் | 1000 பருவக் கட்டணம் | 2000 ஆண்டுக் கட்டணம் | 2000 ஆண்டுக் கட்டணம் |
| 4. | நூலகக் கட்டணம் | 200 | 200 | 250 | 250 | 250 | 300 | 300 |
| 5. | கணிப்பொறிக் கட்டணம் | 100 | 100 | 200 | 200 | 200 | 150 | 150 |
| 6. | விளையாட்டுப்போட்டி | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 7. | காப்புத்தொகை (திரும்பப் பெறத்தக்கது) | 500 | 500 | 500 | 500 | 500 | 500 | 500 |
| 8. | நூலகக் காப்புத்தொகை (திரும்பப் பெறத்தக்கது) | --- | --- | 500 | 500 | 500 | 500 | 500 |
| 9. | நாட்டு நலப்பணி, இளைஞர் நலம், கலை மற்றும் பண்பாடு | 50 | 50 | 100 | 100 | 100 | --- | --- |
| 10. | சோதனைக்கூடக் கட்டணம் | -- | -- | -- | -- | 2000 | --- | 1000 |
| 11. | இணையதள / அடையாள அட்டை | 100 | 100 | 150 | 150 | 150 | 150 | 150 |
| 12. | பிற பல்கலைக்கழகப் பட்டங்களை ஏற்பதற்கான கட்டணம் | --- | --- | 200 | 200 | 200 | 200 | 200 |
| 13. | இந்தியாவின் பிற மாநிலப் பல்கலைக்கழகப் பட்டங்களை ஏற்பதற்கான கட்டணம் | --- | --- | 1000 | 1000 | 1000 | 1000 | 1000 |
| 14. | வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பட்டங்களை ஏற்பதற்கான கட்டணம் | --- | --- | 5000 | 5000 | 5000 | 5000 | 5000 |
| 15. | முன்னாள் மாணவர் சங்கம் | 200 | 200 | 200 | 200 | 200 | 200 | 200 |
| 16. | வெளிநாட்டு மாணவர்களுக்கான சேர்க்கைக் கட்டணம் | | | 10000 | 10000 | 10000 | 15000 | 15000 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கல்விக்கட்டணங்கள் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கும் பொருந்தும். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி

பதிவாளர் (பொ)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010.

**ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டப் படிப்புகளுக்கு இறுதி நாள்: 14.08.2020**
**முதுகலை / முதுஅறிவியல் மற்றும் முதுநிலை நிகழ்த்துகலைப் படிப்புகளுக்கு இறுதி நாள்: 31.08.2020**
**ஆய்வியல் நிறைஞர் படிப்புகளுக்கு இறுதி நாள்: 31.08.2020**

பதிவாளர் (பொ)